2026 ஜூலை மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 142/2025

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW6 (LW9) – முருகானந்தம் |
| தகப்பனார் பெயர்: | மாரிமுத்து |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஓய்வு பெற்ற சார்பு ஆய்வாளர் |
| வயது : | 60 |

29.07.2026

(2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் கடந்த 21.08.2023 ம் தேதி 15.00 மணிக்கு நான் போடி தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது, கிடைத்த தகவலின்படி தலைமை காவலர் 1742 திரு.முத்துராசு, முதல்நிலை காவலர் 251 திரு.முத்துச்செல்வம் ஆகியோருடன் போடி–தேனி பிராதான சாலை அணைக்கரைப்பட்டி விலக்கு அருகில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது, பின்னால் ஊர், பெயர், விலாசம் கேட்டு தெரிந்த, போடி புதூர் போயந்துரை ரோடு, குறும்பத்தேவர் மகன் சடையன் என்பவர் எங்கள் பார்ட்டியை கண்டவுடன் தப்பியோட முயற்சித்தவரை பிடித்து, சோதனை செய்ய, அவர் கையில்

வைத்திருந்த பையை பார்க்க, அதில் 11 நாட்டு வெடிகுண்டு டப்பாக்கள் இருந்தன. அது குறித்து அவரிடம் விசாரித்தபோது, போடிநாயக்கனூர் ஊருக்கு வடக்கு பகுதியில் உள்ள மலைப்பகுதியில் காட்டுப்பன்றிகளை வேட்டையாடுவதற்காக நாட்டு வெடிகுண்டுகளை வைத்திருந்ததாக கூறினார்.

2. மேற்படி வெடிகுண்டு அணைக்கரைப்பட்டியை சேர்ந்த அன்னஞ்சித்தேவர் மகன் ராமு (எ) ரமேஷ் என்பவர் தன்னிடம் கொடுத்ததாக சொன்னார். பின்பு, அதே இடத்தில் 1வது எதிரி சடையனை கைது செய்தும், 15.30 முதல் 16.30 மணிவரை அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முத்துராசு மற்றும் முத்துச்செல்வம் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். அதன்பின்பு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 16.45 மணிக்கு 11 நாட்டு வெடிகுண்டு டப்பாக்களை அத்தாட்சியில் கைப்பற்றினேன்.

3. அதன்பின்பு, 2வது எதிரி ராமு என்பவரை தேடி, அணைக்கரைப்பட்டிக்கு சென்று, அணைக்கரைப்பட்டி, கட்டப்பாலம் அருகில் வைத்து 17.15 மணிக்கு 2வது எதிரி ராமுவை கைது செய்தும், பின்பு எதிரிகள் இருவரிடமும் 17.45 மணிக்கு காவல்நிலையம் வந்து குற்ற எண்.269/2023 பிரிவுகள் 4 (b) of Explosive Substances Act மற்றும் 286 இ.த.ச.–ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. அதன் பின்பு இவ்வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று, 18.45 மணிக்கு சாட்சிகள் அஜித்பாண்டி மற்றும் கணேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7**

ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. எதிரிகள் அனுமதியில்லாமல் நாட்டு வெடிகுண்டுகளை வைத்திருந்ததாலும், நாட்டு வெடிகுண்டுகள் வெடித்தால் மனித உயிருக்கும் உடலுக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடும் என்பதால் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்குச் சொத்துக்களை படிவம் 91 (எண்ணம் 1) மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக வழக்குக் கோப்பை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அவகாசம் வழங்கியும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.29 17:02:22 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
29.07.2026